# கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் அபிவிருத்தி நிதியம் - 2010

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் நிதி நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விளைவுகளது நிதிக்கூற்றுக்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்.

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2011 பெப்ரவரி 28 இற்கு முன்னர் 2010 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்நிதிக்கூற்றுக்கள் 2011 திசெம்பர் 09 ஆம் திகதியே அதாவது 09 மாதங்களின் பின்னரே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

| | | | |
|---|---|---|---|
| திறைசேரி உண்டியல்கள் ஆரம்ப மீதி | 4,149,948 | 41,499,460 | 37,349,512 |

### 1.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 03 சொத்து விடயங்களுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 23,715,600 மற்றும் 05 பொறுப்புக்கள் கணக்கு விடயங்களுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 46,054,372 என்பன 03 ஆண்டுகள் முதல் 06 ஆண்டுகள் வரையான காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டு வந்திருந்ததுடன், அம்மீதிகளை தீர்த்துவைப்பதற்கு 2012 யூன் 06 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 சனவரி 01 இல் ரூபா 23,256,741 தொகையான நிலுவையாக இருந்த கூட்டுறவு சங்க கடன் மீதியில் மீளாய்வாண்டினுள் ரூபா 903,573 அதாவது 3.89% மட்டும் அறவிடப்பட்டிருந்ததுடன், 2010 திசெம்பர் 31 இல் மேலும் ரூபா 22,353,168 அதாவது 96.11% அறவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் நிதிக்கூற்றுக்களில் கூட்டுறவுச் சங்க பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 10,361,157 தொகையான கடன் மீதி 10 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்தும் அறவிடப்படாமல் காணப்பட்டது. இதன் பிரகாரம் திரட்டிய கடன்மீதியில் அறவீடுகள் மிகக் குறைந்த பெறுமதியைக் கொண்ட காரணத்தால் கடன்மீதிகளை அறவிடுவதில் பலவீனமான நிலைமையொன்று காணப்பட்ட போதும் அதற்காக ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை.

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயங்களின் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி | கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| சொத்துக்கள் ஆதனங்களும் உபகரணங்களும் | 7,478,705 | நிலையான சொத்துப் பதிவேடு |

### 2.2.2 வருடாந்த உதவுதொகை ஒதுக்கீடும் உதவுதொகை பெறுவனவிலான குறைவும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1972 இன் 5 ஆம் இலக்க கூட்டுறவு சட்டத்தின் 61 ஆவது பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்ட விதிக்கோவையின் 43(ii) ஆவது விதியின் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு சங்கமொன்றினதும் வருடாந்த தேறிய இலாபத்தில் நூற்றுக்கு பத்துவீதத்திற்கு மேற்படாத மற்றும் ரூபா 5 இற்கு குறையாத தொகை நிதியத்திற்கு பங்களிப்பாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதும் பங்களிப்புத் தொகை பட்டியலில் காணப்படும் 48 சங்கங்களில் 23 மட்டுமே வருடாந்த பங்களிப்பை செலுத்தியிருந்தமை மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) உதவுதொகைப் பட்டோலையின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டிற்குரிய 11 சங்கங்கள் தொடர்பாக மட்டும் உதவுதொகை இனங்காணப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டிற்காக எத்தகைய சங்கமொன்றினதும் உதவுதொகை இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

2003 ஒக்தோபர் 01 ஆம் திகதியிலிருந்து மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட கமநல அபிவிருத்தி நிதியத்தின் ரூபா 16,919,506 கூட்டுத்தொகையான சொத்துக்கள் மற்றும் ரூபா 16,919,506 தொகையான பொறுப்புக்கள் என்பவற்றை 2008 ஆம் ஆண்டில் நிதியத்தின் கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இவ்விரண்டு நிதியங்கள் தாபிக்கப்பட்டதன் நோக்கம் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றமையால் அதன் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கூட்டுறவு நிதியத்திற்கு எந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது என்பது வெளிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதி சரியானதா என கணக்காய்வின் போது திருப்தியடைய முடியவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அவ்வப்போது சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) முற்பணத் தீர்ப்பனவு

(ஆ) கணக்குகள் புத்தகங்கள், பதிவேடுகள் என்பவற்றை நாளது வரையாக்கல் மற்றும் இணக்கம் செய்தல்

(இ) உள்ளகக் கணக்காய்வு

(ஈ) பங்களிப்புப் பேரேட்டினை நாளது வரையாக்கப்பட்டு பராமரித்தல்

(உ) கூட்டுறவுச் சங்கக் கணக்குகளை கணக்காய்வைத் துரிதப்படுத்தல்